# றொம்மன் வளாக ஆசிரியர்களின் அறிக்கை

அன்பான பெற்றோர்களே !

ஆசிரியர்களாகிய நாம் எப்போதும் மாணவர்களின் கல்விச் செயற்பாட்டில் அக்கறையும் ஆர்வமும் கொண்டவர்களாகவே உள்ளோம் .அனைத்து பெற்றோர்களையும் நாம் அன்போடுதான் மதிக்கின்றோம். போராட்டம் செய்யும் பெற்றோராக இருந்தாலும் அல்லது ஏனைய பெற்றோராக இருந்தாலும் எமக்கு எந்த வேறுபாடும் நோக்கமும் கிடையாது. நாம் மாணவர்கள் அனைவரையும் நமது குழந்தைகளாகவே கருதுகிறோம் .

நாம் இன்று கற்பித்தலில் ஈடுபடாமல் தற்காலிகமாக நிற்பதற்கான கரணியம் ..............

றொம்மன் வளாக ஆசிரியர்களாகிய நாம் அனைவருமே பல வருடங்களாக பல்வேறு நிர்வாகங்களுக்குக் கீழே பணியாற்றியுள்ளோம். இருப்பினும் தற்போது கடமையாற்றும் இடைக்கால நிர்வாகமே எம்மை ஆசிரியர் அறையிலிருந்து வெளியே அகற்றியதுடன், காவல்துறையினரையும் அழைத்து அவர்களுடன் சேர்ந்து எம்மை வளாகத்தினுள் உள்நுழைய விடாது தடுத்து நிறுத்தி அவமானப்படுத்தி மிகவும் மனவேதனைக்கு உள்ளாக்கியுள்ளனர் . இப்படியான நிர்வாகப் பண்பு கொண்ட ஒரு நிர்வாகத்தின் கீழே மறுபடியும் கடமையாயாற்ற முடியாமையாலேயே இந்த முடிவுக்கு வந்துள்ளோம்.

மேலும் ஆசிரியர் கூட்டம் ஒழுங்கு செய்து ஆசிரியர்களின் நிலைப்பாட்டை அறியும்படி கேட்டோம். ஆனால் அதற்கான எந்த நடவடிக்கையையும் இதுவரை நிர்வாகம் மேற்கொள்ளவில்லை .

நாம் இன்று சிந்திப்பதெல்லாம் அங்கத்துவம் நீக்கப்பட்ட மாணவர்கள், அவர்களுக்கு ஆதரவாக துணை நிற்கும் மாணவர்களின் கல்வி நிலையைப் பற்றியே. இத்தகைய சூழலில் அமைதியான நிலைப்பாடு ஏற்படும் வரை தற்காலிகமாக குறிப்பிட்ட மாணவர்களுக்காக வகுப்புக்களை பிறிதொரு இடத்தில் நடாத்த திட்டமிட்டுள்ளோம். தற்காலிக இச்செயற்பாடு அங்கத்துவம் நீக்கப்பட்ட மாணவர்களை மீண்டும் இணைக்கப்பட்டு அமைதியான சூழல் ஏற்படும்போது நாம் அன்னை பூபதி றொம்மன் வளாகத்தில் தொடர்ந்து கற்பித்தலில் ஈடுபடுவோம்

குறிப்பு அங்கத்துவம் நீக்கப்பட்ட மாணவர்களை இணைக்கும்படியும் , கற்பிக்கும் சூழலை ஏற்படுத்துமாறும் நிர்வாகத்துக்கு எழுத்து மூலமாக(30.03.25) அறிவித்தல் கொடுத்திருந்தோம். ஆனால் றொம்மன் வளாக நிர்வாகம் அதற்கான உரிய பதிலை வழங்காது (03.04.25) முன்பு கூறிய பதிலையே வழங்கியுள்ளது .

**கற்பித்தலை தற்காலிகமாக நிறுத்தியுள்ள**
**றொம்மன் வளாக ஆசிரியர்கள்**

**08/04/25**

**Offentlig erklæring fra lærere som midlertidig avstår fra undervisning ved APTK Rommen**

**Kjære foreldre!**

Som lærere er vi alltid engasjerte i, og opptatt av elevenes faglige utvikling. Vi har respekt og omtanke for alle foreldre. Enten man er en protesterende forelder eller ikke, gjør vi ingen forskjell. Vi ser på alle elever som våre egne barn.

**Grunnen til at vi i dag midlertidig avstår fra undervisning, er som følger:**

Vi lærere ved APTK Rommen har i mange år arbeidet lojalt under ulike administrasjoner. Administrasjonen ved APTK Rommen har imidlertid kastet lærerne ut av lærerværelset, og har i tillegg gått så langt som å nekte oss adgang til området med politiets bistand. Hendelsen har vært svært ubehagelig og oppleves som en urettferdig og unødvendig måte å behandle oss lærere på. Vi lærere har heller ikke fått den respekten og anerkjennelsen vi fortjener fra styret ved APTK Rommen, og vi ønsker derfor ikke å fortsette vårt arbeid under et slikt styre.

Vi ba om et lærermøte for å uttrykke og forklare vår situasjon, men administrasjonen har til dags dato ikke tatt noe initiativ.

Vår bekymring i dag, er situasjonen til elevene som urettmessig har blitt ekskludert fra APTK, samt de som støtter dem og hvordan dette påvirker deres utdanning. I en slik situasjon, inntil et rolig og trygt miljø er gjenopprettet, har vi bestemt oss for midlertidig å holde undervisningen for de berørte elevene på et annet sted. Så snart de berørte elevene får tilbake sitt medlemskap, og ro og orden gjenopprettes, vil vi gjenoppta undervisningen ved APTK Rommen.

**Merk:** Vi sendte en skriftlig henvendelse til APTK Rommen den 30.03.25, hvor vi ba om at de ekskluderte elevene skulle få tilbake sitt medlemskap, og at det skulle opprettes et godt undervisningsmiljø. Vi mottok et svar fra APTK Rommen den 03.04.25, men dette svaret var ikke tilfredsstillende. I stedet gjentok de det samme svaret som tidligere var gitt.

**Signert**

Lærere som midlertidig avstår fra undervisning ved APTK Rommen
08.04.25